Subject - Magalinyiyal

Code NO - 18K3TAT3

## மகளிரியல்

பருவம்-III AC3 கற்பித்தல் :4 தரப்புள்ளி : 3 பாடக்குறியீட்டு எண் : 18K3TAT3

**நோக்கம்:** இக்காலத்தில் பெரிதும் போற்றப்படும் மகளிரியல் பற்றியும், பெண்ணின மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளைப் பற்றியும் பயிற்றுவித்தல்.

**பயன்:** பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வழிவகைச் செய்தல்.

**அலகு – 1** இந்திய மகளிரின் சமூக பொருளாதார நிலை, திருமணம், விதவைமணம், சொத்துரிமை, விதவை மணம் தடை, பலதாரமண ஆதரவு, விவாகரத்து, பாவச்செயல் பெண்கல்வி, பள்ளி இடைவிலகல், தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பிற உயர்கல்வி பெறல் பொதுவாழ்வில் குறிப்பிடத்தக்கன- மகளிர் இந்திராகாந்தி, அன்னை தெரசா.

**அலகு – 2** பெண்ணியம் மேலைநாடுகளில் தோற்றமும் வளர்ச்சியும், பெண்ணியக் கருத்து விளக்கம் பெண்ணியக் கோட்பாடுகள், நான்கு பெரும் பிரிவுகள், மிதவாதப் பெண்ணியம், தீவிரவாத பெண்ணியம், மாக்சியப் பெண்ணியம்.

**அலகு – 3** – பெண்களின் நிலையை உயர்த்த மகளிர் சட்டங்கள்.

அ. பதி தடுப்புச் சட்டம் - 1829
ஆ. விதவைகள் மறு மணச்சட்டம் - 1856
இ. இந்து வாரிசு உரிமைச் சட்டம் - 1956
ஈ. பிறப்பு திருமணச்சட்டம் - 1954
உ. இந்து திருமணச் சட்டம் - 1955
ஊ. குழந்தைகள் திருமணச்சட்டம் - 1929
எ. பேறுகால அனுகூலச்சட்டம் - 1961
ஏ. பெண்களை ஒழுக்கமற்ற முறையில் பயன்படுத்துவதை தடைசெய்ய சட்டம்-1956.
ஐ. இசுலாமியப் பெண்கள் (விவாகரத்து உரிமை பாதுகாப்புச் சட்டம் ) – 1986
ஒ. சொத்துரிமைச் சட்டம்.

**அலகு – 4** மகளிரின் நல்வாழ்வு, தன்னார்வ நிறுவனங்களின் திட்டச் செயல்பாடுள் - மதிப்பீடுகள்

**அ. அரசு**

1. பெண்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் வாரியங்கள்.
2. பெண்களுக்காக செயல்படும் நலத்திட்டங்கள்.

**ஆ. மகளிர் தன்னார்வ அமைப்புகள்**

1. பிரம்ம சமாஜம், 2. ஆரிய சமாஜம், 3. இராமகிருஷ்ணமிசன், 4.தியோசாபிகல் சொசைட்டி, 6.முகிலா முக்தி மூர்சஜர், முன்னேற்ற பெண்கள் அமைப்பு, விலோசன கஷ்ட கரிசங்க தனா, மனுசி, சிவசத்தி, வங்கதனா போன்ற அமைப்புகளின் மகளிர் சுய உதவிக்குழுக்கள், ஆதரவற்றோர் விடுதிகள், பணிபுரியும் மகளிர்க்கான தங்கும் விடுதிகள்.

# இந்திய மகளிரின் சமூக பொருளாதார நிலை, திருமணம், விதவை மணம்

நா. சத்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசு கலைக் கல்லூரி(த),
தஞ்சாவூர்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

மானிட வாழ்வில் பெண் இல்லை என்றால் அவ்வாழ்க்கை உயிரற்றதாக கருதப்படும். பெண் இல்லாத மனித வாழ்க்கை மாலுமி இல்லாத மரக்கலம் போன்றது. சமுதாயத்தின் சரிபாதி அங்கமான பெண்கள் காலங்காலமாகச் சமுதாயத்தாக்குதலில் ஆட்பட்டு உரிமையை இழந்து வந்திருக்கிறார்கள்.

தமிழ்ச் சூழலில் பெண்ணியம் பற்றி நிறையப் பேசுவதற்கான முயற்சிகள் சமீபகாலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. முனிசீப் வேதநாயகம் பிள்ளை, பாரதியார், திராவிட இயக்கத்தினர் போன்றோரால் பொதுவுடைமைக்காரர்கள் முதலியோரால் பெண்கல்வி, சாதி மறுப்பு, விதவை மறுமணம் பொருந்தா திருமணம் என்றெல்லாம் காலச் சூழலுக்கு ஏற்ப பெண்களைப் பற்றி நிறையப் பேசப்பட்டு வந்துள்ளன.

## பெண்களின் சிறப்பு

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று வள்ளுவரும், "மங்கையராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று கவிமணியும், "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்று சேக்கிழாரும், பெண்ணின் பெருமையை போற்றுகின்றனர். புராதண காலத்தில் இருந்தே பெண்களுக்கு சிறப்பு இருந்தது அதனால் தான் நாட்டையும் நதிகளையும் பெண்களின் பெய கொண்டு அழைத்தார்கள்.

## மகளிரின் அறிவாற்றல்

பெண்கள் ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். பெண்களின் எழுச்சி ஆண்களின் வீழ்ச்சி என்பதற்கு ஏற்ப அறிவாற்றல் மிக்கவர்களாக திகழ்கிறார்கள்.

* வீட்டை பராமரித்தல், குழந்தைகளைப் பேணிகாத்தல் போன்றவற்றின் மூலம் குடும்பத்தை உயர்த்துதல்
* வீட்டுத் தோட்டம், காய், பழம் போன்றவற்றைப் பயிரிடுதல், பாதுகாத்தல் மற்றும் விற்பனை
* வயல் பணிகளைச் செய்தல்
* மேலும் கைத்தொழிலான துணி நெய்தல் போன்ற வேலைகளையும் செய்து வருகின்றனர். இவ்வாறு பெண்களின் கூர்மையும் அறிவும், பொறுமையும் காலந்தோறும் வியக்க வைக்கின்றது.

## மகளிரின் சமுதாய நிலை

ஆண் என்பவன் ஆளப்பிறந்தவன் பெண் அவனையும் அவனுடைய வழித்தோன்றல்களையும் பேணப் பிறந்தவள். இன்றைய சமுதாய அமைப்பில் பெண்ணின் இடம் இதுதான். மனித சமுதாய பொருளியல் சார்ந்த சமுதாயமாக மாறத் தொடங்கிய போது உலகமே வணிகச் சந்தையாக உருப்பெறலாயிற்று. மனிதம் மறைந்து, ஆதிக்கம் உருவாகலாயிற்று. இனங்களிடையேயான ஆதிக்க மனப்பான்மை நாடாதிக்கம் பொருள் ஆதிக்கம் என்று உலகில் பரவத் தொடங்கிய போதுதான் குடும்பத்தில் ஆணாதிக்கம் கால் கொண்டது. உலகத்தில் ஆதிக்க மனப்பான்மைக்கு வித்திட்டது. ஆண்கள் என்பதால் ஆணாதிக்கச் சமுதாயம் அழுத்தமாக அமைந்துவிட்டது என்பார். சமுதாயம், குடும்பத்திற்கு தரும் ஆளுமையே பெண் ஆகும். ஆண் இல்லாது பெண்கள் ஏற்று நடத்தும் குடும்பங்கள் சமூக விமர்சனத்துக்கு ஆளாவது நடைமுறை நிலையே. இதனாலேயே இந்தியப் பெண்களைப் பொறுத்த வரை கல்வி. வேலை வாய்ப்பு இவற்றோடு பல நூற்றாண்டுகளாக சமுதாயம் அவள் பால் திணித்திருக்கும் எதிர்மறை அடிமைத்தனச் சிந்தனைகளை மாற்றிக் கொள்ளவும் அவளைப் பழக்க வேண்டும் என்பார் சிவசங்கரி. அதன்படி சமுதாயத்தளத்தில் பெண்கள் பிரகாசிக்கத் தடையாக உள்ள எதிர்மறைக் கோட்பாட்டினை மறுமதிப்பீடு செய்தல் அவசியமே ஆகும்.

## சமுதாய மறுமலர்ச்சி

சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெண்களிடையே மனவளர்ச்சியும், மன மாறுதலும் தேவை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீட்டை விட்டு வெளியே வரவே அச்சப்பட்ட பெண் சமுதாயம் மரபு வழி சமுதாயமாக மாறியது.

## மரபுவழி சமுதாயம்

தமிழ்ச் சமுதாயம் பெண் மக்களுக்கெனச் சில சமுதாயக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவர்களது கடமைகள், அவர்களது உரிமைகள் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வரையறை செய்துள்ளது. திருமணமான பெண்கள் தம் வீட்டையை உலகமாக்கிக் கொண்டு தன் கணவன், தன் குழந்தைகள், தன் உறவினர் முதலிய அனைவருக்கிடையே நலன்களையும் பேணுவதைக் கடமையாகக் கொள்ள ஆடவன் குடும்பத்தின் தேவைகளுக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பானவனாக இருப்பது மரபு வழிச் சமுதாய அமைப்பாகும்.

## சமுதாய வளர்ச்சியில் பெண்களின் நிலை

1. சமுதாய மதிப்பைப் பெற்றவர்கள்
2. சமுதாய மதிப்பை இழந்தவர்கள்
3. சமுதாய மதிப்பைப் பெற்று பின் இழந்தவர்கள்

## சமுதாய மதிப்பைப் பெற்றவர்கள்

பெண்ணுக்கு கொடுக்கப்படும் பெருமைகளும் மேன்மைகளும் சமுதாய மதிப்பைக் கொண்டு அளவிடப்படுகிறது. அந்த பெருமைக்கும் மேன்மைக்கும் கலங்கம் ஏற்பாடாதவாறு தன் மரபுக் கோட்பாட்டின் மீது நடந்து வரும் பெண்களைச் சமுதாய மதிப்புடன் நோக்குகின்றது. "மதிப்பு" என்ற முகமூடியை அணிந்து கொள்வதனால் தங்களைத் தாக்கும் வாழ்வியல் சிக்கல்களில் இருந்து விடுபடுகின்றனர்.

இத்தகைய பெண்கள் மற்றப் பெண்களின் செயல்களையும் தீர்மானங்களையும் விமர்சிக்கும் குணம் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

(உ.தா) வஸந்தியின் "வேர்களைத் தேடி" என்ற புதினம் ருக்மணியின் சமுதாய மதிப்பைப் பெற்றவளாகத் திகழ்கிறாள் என்பதை உணர்த்துகிறது.

### சமுதாய மதிப்பை இழந்தவர்கள்

சமுதாயம் வகுத்த விதிகளை மீறியவர்கள் சமுதாயத்தில் மதிப்பை இழந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கணவரிடம் விவாகரத்து பெற்ற பெண்ணைச் சமுதாயத்தினர் இக்கண்ணோட்டத்திலே காண்பதாகவே ஆசிரியர் தனது இரு புதினங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

வேர்களைத் தேடி என்ற புதினத்தில் வரும் மைதிலி கலப்புத் திருமணம் செய்து பின் கணவனின் கொடுமை காரணமாக மணமுறிவு செய்கிறாள். சமூகம் அவளைத் தன் இனத்துக்கும், குலத்துக்கும் துரோகம் இழைத்தவளாகக் காண்கிறது.

### சமுதாய மதிப்பை பெற்று பின் இழந்தவர்கள்

மீண்டும் நாளைவரும் என்னும் புதினத்தில் வரும் உஷா திருமணத்திற்கு முன் சமுதாய மதிப்பைப் பெற்று, திருமண முறிவுக்குப் பின் சமுதாய மதிப்பை இழக்கிறாள். அவள் தோழியர்களாக இருந்தவர்கள். அவளை சமுதாய மதிப்பை இழந்தவளாகக் கருதி அவளை விட்டு விலகுகின்றனர் என்பதை உணர்த்துகிறது.

### சமுதாயத்தில் இன்றைய நிலை

இந்தியப் பெண்களின் சமுதாய நிலையைப் பற்றிச் சரியான முறையில் விளக்க தகுந்த ஆதாரங்கள் இல்லை. இக்காலக் கட்டத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களும், சரித்திரச் சான்றுகளும் கிடைக்குமாயின் இப்பொழுது கூறப்பட்டுள்ள கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை வரலாம் அல்லது அவற்றை மேலும் உறுதிப்படுத்திக் கூறுமாறு அமையலாம் என்ற ஆங்கில அரசாலும் கிருத்துவ மதத்தினராலும் சமூக சீர்த்திருத்த வாதிகளாலும் தொகுக்கப்பட்ட செய்திகள் அக்காலக் கட்டத்தில் பெண்களின் சமுதாய நிலையை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றன.

### பொருளாதார நிலை

சங்க காலப் பெண்கள் கூட்டுக் குடும்ப வாழ்க்கை. விருந்தோம்பல் வேளாண்மை முதலியவற்றைக் கடைபிடித்து இல்லறமல்லாது நல்லறமன்று என்ற நாகரிகமும் - பண்பாடும் கொண்டு மிகச்சிறந்த நிலையில் இருந்தனர்.

சங்ககாலப் பெண்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்ததற்கானக் குறிப்புகள் உள்ளன. பெண்கள்

தினைப்புனம் காத்தல் தொழிலில் ஈடுபட்டு அதன் மூலம் விளைபயிர்கள் பாதுகாக்கப்பட்டு விவசாயம் மேம்படப் பங்காற்றினர். ஆடு மாடு வளர்த்தல், பராமரித்ததிலிருந்து பெறப்படும் பால், தயில், மோர், நெய் ஆகியவற்றை விற்றல் ஆகிய தொழில்களில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். நெய்தல் நிலப் பெண்கள் கடற்பயணம் மேற்கொள்ளவில்லை. எனினும் மீன் தொழில் மற்றும் உப்பு எடுத்தல், விற்றல் ஆகிய தொழில்களிலும் பெண்கள் பங்கெடுத்திருந்தனர்.

சிக்கனமாகக் குடும்பத்தை நிர்வகித்து குடும்பப் பொருளாதாரம் உயர்வதற்கும் வழிவகுத்தனர். விருந்து புறந்தருதலும் தன் சுற்றத்தினருக்கு வேண்டுவன அளித்தலும் பெண்ணின் சிறந்த கடமைகள் என்று தொல்காப்பியம் பெண்ணின் விருந்தோம்பலைச் சிறப்பாகச் கூறுகிறது.

வறுமையிலும் தங்களின் வறுமை நிலை பிறருக்குத் தெரியாமல் செம்மையாக வாழ்தல் பெண்ணின் சிறந்த பண்பாகச் "சிறுபாணாற்றுப்படை" தெரிவிக்கிறது. பெண்கள் வறுமையிலும் தாய்வீடு சிறந்த பண்பாக "நற்றிணை" கூறுகிறது.

## மகளிரின் திருமணம்

பெண்ணின் திருமணச் சட்டம் 1955ஆம் ஆண்டு மே திங்கள் 18ம் நாள் நடைமுறைக்கு வந்தது. பெண்களின் பருவங்கள் ஏழு ஆகும். அவைகள், பேதை (5 வயது), பெதும்பை (5-10), மங்கை (10-16), மடந்தை (16-25), அரிவை (25-45), தெரிவை (45-60), பேரிளம் பெண் (60 வயதிற்கு மேல்) எனலாம்.

பெண் பருவம் அடைந்தபின் மங்கைப் பருவத்தில் திருமணம் நடைபெற்றது. கற்பு மணம் களவு மணம், உடன்போக்கு என்ற மூன்றுவகையான திருமணம் முறைகள் வழக்கத்தில் இருந்தன.

திருமணச் சடங்குகள் எளிமையாக இருந்ததாக அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. சமயச் சடங்குகள் இல்லை. யாகங்கள் இல்லை, புரோகிதர்கள் இல்லை, தாலிகட்டாமல் மணமக்கள் இருவரும் மணமாலை சூடி மங்கல வாத்தியங்கள் முழங்க, பெற்றோர் பெரியோர்களின் நல்லாசியுடன் ஆரியச் சார்பற்று எளிய முறையில் திருமணம் நடைபெற்றது.

**ஆன்றோர் விளக்கம் :** அன்று தொட்டு இன்று வரை "திருமணம்" என்ற சொல் வெவ்வேறு பெயரால் குறிக்கப்பெற்று வந்துள்ளது.

திருமணம் நடக்கும் இடம் காலம், "மணம்" என்பதே தமிழரின் பழைய மரபுதான்.

"தெள்ளு தமிழுண்தோன் நான் பெற்ற பங்கே
திருமணம் எனக்கென்றே உளதாயோ சங்கே"

## திருமண வகைகள்

1. களவு மணம் 2. தோன்றில் மரபின் மன்றல், 3. பரிசு கொடுத்து மணத்தல், 4. சேவை மணம், 5. தினைகாப்பு மணம், 6. ஏறுதழுவி மணமுடித்தல், 7. மடலேறி மணமுடித்தல், 8. போர்நிகழ்த்தி மணமுடித்தல், 9. துணங்கையாடி மணத்தல், 10. பலதார மணம். திருமணத்தின் போது மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும்.

திருமணத்திற்கான தேவைகளும் நிபந்தனைகளும் மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. பண்டையக் காலத்தில் செயல்பாட்டில் இருந்த எண் வகை திருமணங்களும் தடைசெய்யப்படுகிறது.

விரும்புவோர் தங்கள் திருமணத்தை எவ்வித சடங்கு சம்பிரதாயமும் இன்றி பதிவுத் திருமணமாக கூட செய்து கொள்ளலாம்.

கலந்து பேசி ஒரு முடிவிற்கு வருதல், மீண்டும் சேர்ந்து வாழ்தல், தீர்ப்பு வழி பிரிதல், திருமண ரத்து போன்ற 4 வகை தீர்வுகளின் வழி திருமணம் செய்து கொள்வோருக்கு உரிமை வழங்கப்படுகிறது,

கணவன் இல்லாமல் பிறக்கும் குழந்தைகளுக்கு முறையான சட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கின் இடையேயும் நிரந்தரமாகவும் வாழ்க்கை பொருட் உதவி பெற வகை செய்யப்பட்டுள்ளது.

திருமணம் செய்து கொள்பவரின் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி, குறித்து உரிய ஆணை பிறப்பிக்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

## திருமணத்திற்கான அடிப்படை தேவைகள்

5 முறையான திருமணத்திற்கு தேவையான நிபந்தனைகளை எடுத்துரைக்கிறது.

தனது கணவன் (அ) மனைவி உயிரோடு இருக்கும் போது யாரும் இன்னொரு திருமணம் செய்யக் கூடாது.

புத்தி சுவாதிநம் இல்லாமை (அ) வலிப்பு நோய் வருதல், இத்தகைய நபரும் திருமணத்திற்கு தகுதியற்றவர் ஆவார்.

மணமக்கள் இருவரும் தடுக்கப்பட்ட உறவுமுறை உள்ளவராக இருத்தல் கூடாது.

திருமணம் செய்பவர்கள் உரிய வயதை அடைந்தவராக இருக்க வேண்டும் என்பதால், அவர்களின் திருமணத்திற்கு பெற்றோரின் இசைவு தேவையில்லை.

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன் மக்கட்பேறு"** (குறள் - 60)

இல்லறத்தை சிறக்க செய்பவள் சிறந்த மனைவி என்பதை உணர்த்தி இருக்கிறார் வள்ளுவர்.

## ஒரு துணை மணம்

திருமணத்தின் போது இருவருக்கும் திருமணம் ஆகி, அந்த இருவரும் பிரிந்து அவர்கள் சட்டப்படி பிரிவு ஆணை வாங்காமல் பிறகு திருமணம் செய்யக் கூடாது.

பழைய திருமண சட்டப்படி மனைவி உயிருடன் இருக்கும் போது திருமணச் சட்டப்படி கணவன் இன்னொரு திருமணம் செய்ய அனுமதிக்கப்படாதிருந்தார். ஆனால் திருத்தியமைக்கப்பட்ட 1955-ஆம் ஆண்டு சட்டப்படி ஆண் பெண் இருபாலருக்கும் இது கட்டாயமாக்கப்பட்டது.

திருமணத்தின் போது தனி ஆளாக இருக்க வேண்டும் (அ) மனமுறிவு பெற்றவராகவோ, கணவன் மனைவியை இழந்தவராகவோ இருக்கவேண்டும்.

இதனை மீறுவது சட்டப்படி குற்றம். மனைவி இருக்கும் கணவனும், கணவன் இருக்கும் போது மனைவியும், திருமணம் செய்து கொள்வது சட்டப்படி குற்றம் ஆகும்.

இதை மீறி செய்தால் திருமணம் செல்லாது.

**மனநிலைத் தகுதி**

மனநிலைத் தகுதி என்பது இரு தரப்பினரும் இசைவு கொடுக்கக் கூடிய நிலையாகும். இதற்கு மனநிலை சரியான நிலையில் இருக்க வேண்டும். திருமணத்திற்கு பிந்தய தாம்பத்திய வாழ்க்கைக்கு குழந்தை பெற்றெடுப்பதற்கும் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

இத்திருமணத்தை பதிவு செய்வதன் மூலம் சட்டத்தின் பார்வையில் அது சமய சார்பற்றாதாகி விட்டது.

**விதவை மணம்**

தனக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்ற மனசாட்சி இல்லாதவர்கள் விதவைக்குத் திருமணம் செய்தால், பெண்ணின் கற்பொழுக்கம் கெடும் என்றனர். இதை மறுத்த தந்தை பெரியார்,

விதவை மறுமணம் செய்யவில்லையென்றால் தான் கற்பொழுக்கம் கெடும் என்றார். விதவையாய் விட்டால் ஒரு பெண்ணின் உள்ளத்தில் உண்டாகும் இயற்கை இன்ப உணர்ச்சி மங்கிவிடுமோ, இயற்கையில் எழும் இன் உணர்ச்சியை இளமங்கையார் எங்ஙனம் அடக்கிக் கொண்டிருத்தால் சாலும்? எனவே எத்துணைக் கட்டுப்பாடுகளை அவர்கள் வைத்திருப்பினும் இயற்கையை வெல்ல வழியற்று, தீய ஒழுக்கத்தால் விழ்ந்து அறியாதனமாய்க் கருவுற்று சிசுக்கொலைத் தோஷத்திற்கும் தீராத அவமானத்திற்கும் ஆளாகி வருகிறார்கள். இக்குற்றம் யாரைச் சேரும்? விதவை மறுமணம் செய்யக்கூடாதென்று வன்முறையாய் சிறைப்பிடித்து வைத்திருக்கும் அவர்களின் சமூகத்தாரையே சாரும் என்பது உறுதி என்றார்.

மறுமணம் செய்து கொள்ள விரும்பாத கைம்பெண்கள் இருந்தால் இருக்கட்டும் அவர்களைப் பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம், மறுமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்களுக்குத் தாராளமாய் மணஞ் செய்து கொள்ள இடமளிக்க வேண்டும் என்பதை நமது கோரிக்கை என்றார். விதவைகளுக்கு திருமணம் செய்யவில்லை என்றால் நேரும் பின் விளைவுகளையும் பெரியார் கூறினார்.

நமது சமூகத்தில் விதவைகள் கர்ப்பமடைந்து, கர்ப்பத்தை அழிப்பதும், பிள்ளைகளைப் பெற்று கொலை செய்வதும் வீடுகளை

வீட்டுப் பெற்றோர் அறியாமல் நினைத்த புருஷர்களுடன் ஓடுவதும் பிறகு பொது விபச்சாரியாக மாறுவதும், அதனை கண்ணால் பார்த்து துன்பமடைகின்றனர்.

## விதவை மறுமணம் வரவேற்றல்

1856இல் பெண்கள் சுதந்திரமாகவும் நம்பிக்கையுடனும் ஈஸ்வர சந்திர வித்தியாசகாகர் என்ற சமுதாயச் சீர்திருத்தவாதி இடைவிடாத முயற்சி காரணமாக விதவை மறுமணச் சட்டம் கொண்டுவரப்பட்டது. கணவனை இழந்த கைம்பெண்கள் முக்காடு இடும் முறையை ஒழித்தது. அவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினார்.

ஒரு பெண் விதவையான பின் அந்நிலையிலேயே நீடிப்பதா? அல்லது வேறொரு துணையுடன் வாழ்வதா? என்பதை அப்பெண் தான் முடிவு செய்ய வேண்டும். இதற்கு மாறான நிலை தான் எப்போழுதும் பெரும்பான்மை நிகழ்கின்றது. இதனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகள் மழுங்கடிக்கப்படுகின்றன. இயற்கையாகப் படைக்கப்பட்ட உயிரினங்களில் ஆண் எனும் ஒரு சாரார் நிரந்தர மகிழ்ச்சியுடனும், பெண்ணாகப் பிறந்ததனால் காரணங்களற்றுத் தண்டனைகளைச் சுமப்பதும் இச்சமுதாய வழக்கமாக இருந்து வருகின்றனது. இது நியமற்ற செயலென்று ஆறு அறிவுடைய நாம் நினைக்கவில்லை. அதனால் விதவைப் பெண்ணின் துயரங்கள் மிகுதியாக அடையாளங் காணப்படவில்லை.

நாகர்கோவில் சேவ அயங்கார் (*Madras Hindu Widow Marriage Association*) சென்னை ரகுநாதராவ் (*Hindus Women's Remarriage Association*) ராஜராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பண்டிதரமாபாய். மகாத்மா ஜோராவ்பூலே மகரிஷி கார்வே போன்றோரின் அருமுயற்சிகளால் விதவைகளின் வேதனை பரிசீலிக்கப்பட்டது. இப்பிரச்சனை குறித்துப் பாரதியார், விவேகானந்தர், மகாத்மாகாந்தி ஆகியோரின் மாறுபட்ட கருத்தாடல்களைக் காண்போம்.

விவேகானந்தரும் காந்தியும் சமுதாயச் சீர்திருத்த நோக்குடையவர்களானாலும், விதவை மறுமணங் குறித்து அவ்விருவருடைய சிந்தனைகள் ஆணித்தரமாக வெளிப்படுத்தப்ப என்று பாரதியார் கருதுகின்றார். "கைம்பெண்ணின் கண்ணீரைத்

துடைக்கவும் தாய் தந்தையற்ற குழந்தைகளின் வயிற்றுக்குச் சோறிடவும் வழிகாட்டாத தெய்வத்தையேனும் மதத்தையேனும் நான் நம்பமாட்டேன்"(பெ.சு.மணி. ப.194) என்பது விவேகானந்தரின் சமுதாயச் சிந்தனை. இவர் இவ்வாறு கூறினாலும் நாட்டில் இயங்கிவரும் சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்ளவில்லை என்பதே பாரதியாரின் வருத்தம். ஸ்வாமி விவேகானந்தர் இந்தியாவில் சீர்திருத்தக் கட்சியிலே சேர்ந்தால் தம்முடைய மடத்துக் கொள்கைகள் பரவ இடமிரா என்ற எண்ணத்தாலும் இயற்கையிலே தமக்குள்ள ஸந்யாஸப் பைத்தியத்தாலும் கைம்பெண்களுக்கு விவாகம் நடத்தி வைக்க வேண்டும் என்ற விஷயத்தில் மிகவும் அசிரத்தையுடன் பேசுகிறார். (பெ.சு.மணி. பக்.194-195) என விவேகானந்தரின் கருத்தில் பாரதியார் மாறுபடுகின்றார்.

பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால்தான் விதவை மறுமணத்தை நடைமுறைப்படுத்துவது எளிதானதல்ல என்று விவேகானந்தர் இதனை ஜனஸங்கை என்கின்றார். ஜனஸங்கை காரணமாக விதவை மறுமணப் பிரச்சனையாகிவிடுகின்றது. ஒவ்வொரு கன்னிகைக்கும் மணம்புரிவதானல் தனித்தனிப் புருஷன் கிடைப்பது அரிது. அப்படியிருக்க ஒருத்தருக்கே ஒருவர் பின் ஒருவராக இரண்டு மூன்று கணவர் கிடைப்பதெப்படி? என விவாதம் செய்கின்றார். அதற்குப் பாதி ஜனஸங்கை ஸ்திரீகளுடை ஆபரணங்களைப் கழற்றி அவர்ளுடைய தலையைச் சிரைக்க வேண்டுமென்று சொல்லிற்று? ஜனஸங்கையா விதவைகள ஒரு நேரநதான் சாப்பிடலாமென்று விதித்தது? கைம்பெண் முகத்தில் விழிப்பதும் வீதியல் செல்லும் போது ஒருவனுக்குக கைம்பெண் எதிர்போவதும் அபசகுனமென்று ஜனஸங்கை தீர்மானத்தது (பெ.சு. மணி. ப. 195). கடுமையாகப் பேசுகிறார், விதவை மறுமணத்தைத் தவிர்க்கக் கூறுவதோடு விதவைப் பெண்ணை இச்சமுதாயம் ஒதுக்கி வைப்பதும் சில அடிப்படை உரிமைகளை மறுப்பதும் ஏன்? இயற்கையாக நடந்ததற்கு யார் என்ன செய்ய முடியும்? அத்துடன் அவளுடைய உணர்வுகள் அனைத்தும் செத்துவிடுமா? அனைத்து உணர்வுகளும் உள்ளவள் தானே, அவ்விதவைப் பெண். அவள் இழந்தவற்றை மீண்டும் அனுபவித்தால் யாருக்கு எந்தவகையில் நட்டம் ஏற்பட்டுவிடும்.

பால்ய விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார். ஆனால் அதைக்கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியம் இல்லை. எல்லா விதவைக்கும் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயங்கள் தகுந்த மாற்று. எனவே பெண்கள்,

அறநெறி பிறழாத உள்ளமும்
அஞ்சாத நெஞ்சமும் கொண்டவர்கள்

பெண்களால் முடியாதது எதுவும் இல்லை என்பதை பெண்கள் உறுதி செய்து வருகின்றனர். பெண் என்றால் தாழ்வு இல்லை. ஆணுக்கு நிகராக எங்களாலும் எதையும் செய்ய முடியும் என பெண்கள் பாடுபடுகின்றனர்.

பொங்கி எழு பெண்ணே
உலகம் வரும் உன் பின்னே

என்ற பொன்மொழிக்கேற்ப பொதுவாழ்விற்காகவும் நாட்டின் நலனையே தன் வாழ்வு என கொண்டு தியாகம் செய்யக்கூடியவர்கள் பெண்கள் என இதன் வழி அறிய முடிகின்றது.

## பார்வை நூல்கள்


1. பி. ரோசப்பூ கல்யாண சுந்தரி, இந்திய மகளிரியல்

2. டாக்டர். சசிவல்லி., தமிழர் திருமணம்

3. திரு.வி. கல்யாணசுந்தரம், பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத் துணை

4. சரளா இராசகோபால், போராண்மையாளர்களின் பெண்ணுரிமைச் சிந்தனை.

5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அகநானூறு

6. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், புறநானூறு

7. பெ.சு.மணி, சமுதாய சிந்தனை.

# பெண்ணியம் - கருத்து விளக்கம், பெண்ணியக் கோட்பாடுகள்

க. சுப்புலெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்.
தமிழ்த்துறை.
குந்தவை நாச்சியார் அரசு மளிர் கலைக் கல்லூரி(த).
தஞ்சாவூர்.

*சமூக அக்கறையின் வெளிப்பாடாகிய பெண்ணியம் சமூகத்தின் செம்பாகமான பெண் இனத்தின் இருத்தலைப் பற்றி பேசுவது ஆகும்.*

*உலகளாவிய நிலைப்பாட்டைக் கொண்ட பெண்ணியம் பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்தி நிற்கிறது.*

*1889 வரை "Womanism" என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சனையையும் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்பட்ட நிலையில், 1890-ஆம் ஆண்டு 'Feminism' என மாற்றம் பெறுகிறது.*

*Feminism என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தின் சொல்லிருந்து மருவி வந்ததாகும். (Femina - பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள) 1894-ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன்முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டிருக்கிறது. (Feminism - பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது (advocacy of the claims of women))*

*1890-களில் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகிறது.*

*தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொற்களாக வழங்கி வருகின்றது.*

### பெண்ணியம் - விளக்கம்

பெண் தன் இருத்தலை உணர்ந்து, தனக்கும் தன் இனத்திற்குமான போராட்டமாகத் தொடங்கிய பெண்ணியம், இன்றைய நிலையில் ஒவ்வொரு பெண்ணும் தனக்கான சுய அடையாளத்தை *(Self-Identify)* நிலை நிறுத்திக் கொள்ள போராட முன் வர வேண்டும் என்று உணர்த்தி நிற்கின்றது.

தொடக்க நிலையில் "பெண்ணுரிமை" என்றும் "பெண் விடுதலை" என்றும் எளிமையாகக் குறிப்பிடப்பட்டு 20-ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் "பெண்ணியம்" அல்லது "பெண்நிலைவாதம்" என்ற பெயர்களுடன் ஆழமாக நிலைப்பட்டுப் போயிருக்கும் இச்சித்தாந்தம் குறித்த வரையறையை அறிவியல் துறைகளைப் போல "இதுதான் அது" என ஓரிரு வரிகளுக்குள் அடக்கிக் கூறிவிட முடியாது.

"ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு, நோக்கு, செயல் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்" என்று சமூகவியல் துறை சார்ந்த முத்துச் சிதம்பரம் குறிப்பிடுகின்றார். மேலும்,

ஒரே இனத்து மக்களிடையேயும் கூட அவர்களுடைய கல்வி, விழிப்புணர்ச்சி, ஆண், பெண் வேறுபாடு, ஆண் ஆதிக்கம் இவற்றைப் பொறுத்து இதன் விளக்கம் மாறுபடும். உதாரணமாக , இந்தியாவில் அந்தணர் கருதும் பெண்ணியம் ஆதிதிராவிடர் கருதும் பெண்ணியத்திலிருந்து வேறுபடும் என்று கூறியுள்ளார்.

பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள செயற்படும் முயற்சிகள் தாம் பெண்ணிய புரிதல் என்று தெற்காசிய நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

### அறிஞர்களின் விளக்கம்

பெண்ணியம் என்பதற்கு பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்ற நிலையில், அதில் பல வேறுபாடுகள் இருப்பினும், அடிப்படையில் பாலியல் சமத்துவம் *(Sexual Equality)* என்ற பொருளையே தருகின்றது. அவ்வகையிலான அறிஞர்களது விளக்கங்களை காணலாம்.

**கார்டன்**

பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து, அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம் என்று வரையறை செய்கின்றார்.

**ஜெயின்**

பெண்ணியம் என்பது பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும், அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்.

**புட்சர்**

பெண்ணியம் என்பது, பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்று குறிப்பிடுகின்றார்.

**சார்லட் பன்ச்**

பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும் பொருளாதாரத்திலுமம், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார்.

**பார்பரா ஸ்மித்**

பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத் தளையிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், தன்பால்ச் சேர்க்கையுடைய பெண்கள், வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு மணமுறையிலும் துன்புறும் பெண்கள் இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும்.

இதன்றி இயல்பான அல்லது சற்றுக் குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது என்று பார்பரா ஸ்மித் சற்று விரிவாக விளக்குகின்றார்.

மேலும், இவரது கருத்தை அடியொற்றி டோனோ ஹாக்ஸைட் மற்றும் ஆ மாரோ என்பவர்கள் "பெண்ணியம் என்பது தீவிரசெயல்பாடுடையது" என்றும் தீவிர செயல்பாடு இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி, தானே இல்லாமல் போய்விடும் என்றும் கருதுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தெரசா ப்ளிங்டன்

பெண்ணியம் உலகத்தையே மாற்றியமைக்கும் என்று கருத்துரைக்கின்றார்.

### ரோஸ்லின் டென்மார்

பெண்ணியம் "பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம்" என்றும் பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவது என்பது பெண்ணியத்தின் மையச் செயல்பாடாக அமைந்து உள்ளதால் சிறந்த சமூக இயக்கம் என்றும் எடுத்துரைக்கின்றார்.

### ரே ஸ்டான்சி

பெண்ணிய மையச் செயற்பாடு சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும் என்று கூறியுள்ளார். இவர் "காரணம்" என்ற பெண்ணிய விளக்க நூலை எழுதியுள்ளார்.

### பெண்ணியக் கோட்பாடுகள்

"மனித இனச் சமன்பாட்டை நாடுவதே பெண்ணியத்தின் தலையாய குறிக்கோள்",

**"பெண்ணடிமை தீரும் மட்டும்**
**பேசுந் திருநாட்டில்**
**மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே"**

எனப் பாவேந்தர் பெண்கள் விழிப்புணர்வு பெற்று அடிமை நிலையிலிருந்து விடுபடும் வரை நாட்டில் மக்களை அடிமைப்படுத்தும் நிலையை மாற்ற இயலாது என்று கூறியுள்ளார்.

இதிலிருந்து நாம் பெண்தான் நாட்டின் உயர்நிலைக்கு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பாடுபடுகிறாள் அவளை பேணுதல் சிறந்தது என்பதை உணர வழிவகை செய்கிறார்.

பெண்ணியம் என்ற சொல் 1890-களிலிருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்களுக்கான உரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது.

பெண்கள் மீது அதிக அக்கறை கொண்ட இலக்கிய கோட்பாடுகளுள் ஒன்று பெண்ணியம், இக்கோட்பாடு பிரெஞ்சு நாட்டிலிருந்து ஏனையப் பகுதிகளுக்குப் பரவியதெனலாம்.

பெண்ணியக் கோட்பாடுகள் நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் மாறுபடுகின்றன. மேலை நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் வெவ்வேறு வகையாக வழக்கில் உள்ளன. அவை,

## பிரெஞ்சுப் பெண்ணியம்

உளவியல் பகுப்பாய்வு முறையில் பெண்ணியத்தை விளக்குகிறது. பெண்ணின் சுயமான விருப்பங்கள் உணர்வுகள் அவற்றின் முறிவுகள், சிதைவுகள் முதலியவை உள்ளத்தே அழுத்தப்பட்டிருக்கின்றன என்பதாகச் சொல்லுகிறது. அதனையே பிரதானமாகக் கொண்டு பிரெஞ்சு பெண்ணியத் திறனாய்வு பேசுகின்றது.

## ஆங்கில பெண்ணியம்

இது முக்கியமாக மார்க்சிய ஒளியில் பெண்ணியத்தை விளக்குகிறது. சமுதாய அமைப்பில் பெண்ணடிமைத்தனம் அதன் வடிவங்கள் மற்றும் அதன் வெளிப்பாடுகள் பற்றிச் சொல்லப் பெண் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறாள் என்ற நிகழ்வை இத்திறனாய்வு பேசுகிறது. அதே போது பிரெஞ்சுத் திறனாய்வின் செல்வாக்கும் இதிலே உண்டு.

## அமெரிக்க பெண்ணியம்

இது முக்கியமாகப் பனுவலை மையமிட்டு அமைகிறது. பெண்ணியம் இலக்கிய பனுவல்களில் எவ்வாறு தன்னைச் சொல்லிக் கொள்கிறது என்பதை பேசுகின்றது.

இந்தியச் சூழலிலோ, தமிழ்ச் சூழலிலோ பெண்ணியத் திறனாய்வின் தன்மையினை இன்னது என அறுதியிட்டுக் கூறுமுடியாது. மூன்றனுடைய தாக்கங்களும் உள்ளது. எனினும் ஆங்கிலப் பெண்ணியத்தின் தாக்கம் இந்தியப் பெண்ணியத்திற்கு அதிகம் உள்ளது.

## பெண்ணியக் கோட்பாடுகள்

மனித இனச் சமன்பாட்டை நாடுவதே பெண்ணியத்தின் தலையாய இலக்கு ஆகும்.

பெண்ணியம் என்ற கோட்பாடானது ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ, அந்த அளவுக்கு பெண்களுக்கும் மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதோடு, அதன் அடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூகத்தை உருவாக்கித் தரவும் முயலுகின்றது என விளக்கம் செய்யப்படுகின்றது.

பல்வேறு காலகட்டங்களில் பல அறிஞர்கள் ஆய்வு செய்து வெளியிட்ட கருத்துக்கள் "பெண்ணிய கோட்பாடுகள்" எனப்படுகிறது.

இக்கோட்பாடுகளின் அடிப்படையில் இதனை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை

மிதவாத பெண்ணியம்
மார்க்சிச பெண்ணியம்
சோஷலிச பெண்ணியம்
தீவிரவாதப் பெண்ணியம்

எனப் பகுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவும் பெண்களின் தாழ்நிலையின் காரணங்கள் பற்றியும், அக்காரணங்களை மாற்ற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பற்றியும் கருத்துக் கூறி விளக்கி நிற்கின்றன.

இதனடிப்படையில் பெண்ணிய வகைகளின் மாறுபாடுகளை அறியமுடிகின்றது.

## மிதவாதப் பெண்ணியம்

பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தத்துவப் புரட்சி மூலமாக மிதவாதப் பெண்ணியத்தின் கொள்கைகள் வேர்விட ஆரம்பித்தன. மேற்கத்திய நாடுகளில் அரசியல் கலாச்சாரத்தில் பகுத்தறிவு *(Rationalism)* இடம் பெறத் தொடங்கியதனால் ஆட்சிக் கொள்கையை எதிர்த்தல், குடியாட்சி, பேச்சுரிமை என்ற இவையெல்லாம் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பகுத்தறிவு எழுச்சியினால் விடுதலை உணர்விற்கும் பெண்களின் அடிமை நிலைக்கும் ஒரு நல்லுறவு தோன்றித் தாராளப் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டது. இவ்வியக்கம் தனி ஒருவரின்

விடுதலை, மன மகிழ்ச்சி இவை அரசாங்கத்தாலும் சமூகத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையோடு தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு மனிதனுக்கும் சில பிறப்புரிமைகள் உள்ளன. அவை அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்தினர். மிதவாதப் பெண்ணியத்தில் மனிதர்களைப் பற்றிய இரண்டு கருத்துக்கள் முக்கியப் பங்கு வகுத்தன. அவை,

*** காரண காரியங்களை ஆராய்ந்து பார்க்கும் திறமை**

*** தனிமனித சுதந்திரம்**

முதல் கருத்தின்படி பெண்களுக்கு காரணகாரியங்களை ஆராய்ந்து பார்க்கும் திறன் உள்ளது என்பதை மிதவாத பெண்ணிய வாதிகள் விளக்கினர்.

இரண்டாவது கருத்தின்படி பெண்ணும் ஆணைப் போல் ஒரு தனிநபர் என்றும் பெண் ஆணின் போகப் பொருள் அன்று என்ற நிலையை விளக்கினர்.

இதன் மூலம் ஆணைச் சார்ந்து பெண் வாழும் நிலை மாறி பெண்களுக்கு தனிமனித உரிமைகளும் சுதந்திரமும் தேவை என்ற கருத்து வலியுறுத்தபப்பட்டது.

சமத்துவம், மக்களாட்சி முதலிய தனிமனித சுதந்திரக் கருத்தக்களுக்கும், நடைமுறையில் பெண்கள் அடிமைகளாக எவ்வித சுதந்திரமுமின்றி நடத்தப்படுவதற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டினர்.

## ஆரம்ப கால மிதவாதப் பெண்ணிய வாதிகள்

பெண்களின் முக்கியமான இடம் குடும்பமே, என வலியுறுத்தினர். இவர்கள் ஆண் பெண் இருபாலருக்கிடையே வழக்கத்திலுள்ள வேலைப் பங்கீடுகளை எதிர்க்கவில்லை.

ஆயினும் இவ்விருவரும் வேலைகளுக்கிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கக் கூடாது; இருவரும் சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

## பிற்கால மிதவாதப் பெண்ணிய வாதிகள்

சமூகம் பெண்களின் நல்லியல்வுகள் எனச் சித்தரிக்கு பெண்மையை மாயை எனச் சாடுவதோடு அவர்களை வீட்டி

சிறைப்படுத்தி, பெண்களின் ஆற்றல்கள், உந்துதல்கள் வெளிப்படாதவாறு அடக்கி பெண்களுடைய மதிப்பைக் கெடுக்கின்றது என்று கருத்து தெரிவிக்கின்றனர்.

அடக்குமுறை நிலைமாறப் பெண்கள் தங்களை அர்த்தமுள்ள வாழ்க்கைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், திருமணம், தாய்மை இவற்றுடன் வாழ்க்கைப் பணியையும் இணைத்துப் புதுவிதமான வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

## மிதவாதிகளின் பெண்ணியக் கொள்கைகள்

பெண்களின் தாழ்நிலைக்கு சமூகத்தில் நிலவும் குறைபாடுகள் காரணம் எனவும், அதனை களைய சில சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையோடு செயல்பட்டனர்.

பெண்களுக்கு உரிமை அளிக்க வகை செய்யும் பொருட்டு சட்டச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த வலியுறுத்தி, சொத்துரிமையும், பொது உரிமையும் அளிக்க ஏற்பாடு செய்தனர்.

திருமணம் கணவன் மனைவிக்கிடையேயான உடன்பாடாக கருதபடல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

பெண்களுக்கு கல்வி அளிப்பதன் மூலம் உரிமைகளை உணரச் செய்ய முடியும் என்று எடுத்துரைத்தனர்.

சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்களை நீக்கிப் பெண்களைப் பற்றிய நல்லக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முற்பட்டனர். கல்வியின் மூலமும் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமும் பொது மக்களுக்குப் புதுக் கருத்துக்களைப் பரப்பி சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்த வழி முறைகளை கொண்டு வர முயற்சி செய்தனர்.

கற்பழிக்கப்பட்ட பெண்கள், கொடுமைகளுக்குள்ளான பெண்கள், அபலைகள் முதலியோர்க்கு ஆதரவு இல்லங்களை அமைத்து நடத்தினர். மேலும் குழந்தைகள் காப்பகங்களும் அமைத்து செயற்படுத்தினர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மிதவாதப் பெண்ணியவாதிகள் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன்னை மேம்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் உயர வேண்டும் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டனர்.

**மார்க்சியப் பெண்ணியம்**

காரல் மார்க்ஸீம் ஏங்கல்சும், கம்யூனிசக் கருத்துக்கள் பரவக் காரணமானவர்கள் ஆவர். மார்க்ஸின் கருத்தக்களை ஏங்கல்ஸ் "குடும்பம், தனிச் சொத்துரிமை, அரசு இவற்றின் தோற்றம்" *(Origin of the family privare proerty and the state)* எனும் நூலில் விளக்குகின்றார்.

ஏங்கல்சின் கருத்துப்படி, பொருள் முதல்வாதக் கொள்கையின் அடிப்படையில் கூறப்படும் வரலாற்றில் சமுதாய வாழ்வின் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் பொருளுற்பத்தியும், மனித மறுஉற்பத்தியும் சமுதாயத்தின் வரலாற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகும்.

பெண்கள் குடும்பத்தின் மூலம் தாழ்நிலை அடைவதே முதன்முதலாக உருவாகின்றது. அதைத் தொடர்ந்து அடிமைவர்க்கம் தாழ்த்தப்படுவதும் நிகழ்த்தப்படுகின்றது. இவையிரண்டும் தனிநபர் சொத்துரிமையின் தொடக்க விளைவுகள் ஆகும்.

அதனால் தனிநபர் சொத்துரிமை அழிக்கப்படுவதன் மூலம் பெண்களின் தாழ்நிலையும், அடிமைவர்க்கத்தின் தாழ்நிலையும் மறையும் என்பது ஏங்கல்ஸ் கருத்தாகும்.

ஆரம்பகால சமூகத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து பலருடன் பாலுறவு கொண்டு மக்களைப் பெற்றெடுத்தனர். அச்சூழலில் குழந்தைகளுக்கு தாயை மட்டுமே அடையாளம் தெரியும், தந்தையாரெனத் தெரியாது.

தாய்வழிச் சமூக அமைப்பு வழக்கிலிருந்து, பெண்களுக்கு மதிப்பு இருந்தது. ஆண்களும் பெண்களும் செய்யும் வேலைகளில் உயர்வு தாழ்வு பாராட்டப் பெறவில்லை.

அதன் பின்னர் தனிநபர் சொத்து அதிகரிக்க பிற மனிதர்களின் உழைப்பு தேவைபட்டது. தனக்கு பிறந்த குழந்தைகள் வாரிசாக வேண்டும் என்னும் நிலை ஏற்பட்ட போது, உதவியாக ஒரு பெண்

ஒரு ஆணை மட்டுமே மணம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டு தாய்வழிச் சமூகம் மறைந்து தந்தை வழிச் சமூகம் ஏற்படுத்தப்பட்டது.

ஏங்கல்ஸ் இதனைச் சமூகத்தில் பெண் இனத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி என விவரிக்கின்றார்.

சரித்திரத்தில் முதல் வர்க்க நசுக்குதல், ஆண் பெண்ணை ஒரு நபர் மணத்தின் மூலம் கட்டுப்படுத்தியதன் மூலம் தான் ஆரம்பமாயிற்று என்கிறார். மேலும் ஆண் நாயக ஒருநபர் மணத்தில், பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகள் ஒருவனுக்கு மட்டுமே செய்யும் தனி வேலைகளாயின இதற்குச் சமூக மதிப்பு கிடையாது.

ஆண், பெண் இருபாலருக்குமான வேலைகள் அளிக்கப்பட்ட மாறுபட்ட மதிப்புகள் தாழ்நிலைக்கு காரணமானது. இதே நிலைதான் முதலாளித்துவக் குடும்பத்திலுள்ள பெண்களது வாழ்விலும் காணப்பட்டது என்று ஏங்கல்ஸ் விளக்குகிறார்.

தொழிலாள மக்களிடையேதான் உண்மையான அன்பின் அடிப்படையிலான திருமணங்களும், பெண்களின் சுதந்திரமும் காணப்படுகின்றது.

ஆண் நாயகத்தை உறுதிப்படுத்தும் சொத்து இல்லாததால் கம்யூனிச மக்களிடையே பெண்கள் வெளி வேலை செய்தாலும் வீட்டுவேலை செய்வது வெளி வேலை செய்வது என ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையிலேயே உள்ளனர். சமூக வேலைகளில் ஆண்கள் மட்டுமே குடும்பத்தின் பிரதிநிதியாகச் செயலாற்றுகின்றனர் என ஏங்கல்ஸ் விளக்குகின்றார்.

## மார்க்சிய பெண்ணியத்தின் கொள்கைகள்

மார்க்சிசக் கருத்துப்படி உண்மையான சமூக சமத்துவம் ஆண், பெண் இருபாலரும் சட்டப்படி சம உரிமைகளை அனுபவிப்பதன் மூலமே செயற்பட முடியும் என்று கூறுகின்றனர்.

பெண் இனம் முழுவதும் பொதுத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் சமஉரிமைகளை பெறுதல்.

ஒரு நபர் மணம் சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பகுதியாக இருப்பது தவிர்க்கப்படுதல்.

சமுதாய புரட்சியின் மூலம் சொத்துக்கள் சமுதாய உடைமையாகும் பொழுது வாரிசு முறையிலுள்ள சொத்துக்கள்

குறையும் இதனால் ஒரு நபர் மணமும் தனிநபர் சொத்துரிமையும் தகர்த்தல்,

தனிக்குடும்ப நிர்வாகம் சமூக நிறுவனத்திற்கு மாற்றுதல்,

குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி பொதுப் பணிகளாக மாற்றுதல்,

ஆண், பெண் உறவுகள் அன்பின் அடிப்படையில் அமைக்கப்படுவதால் திருமண உறவுகளை ஒரு மண உறவாக மாற்றி ஆண் ஆதிக்கத்தை மறையச் செய்தல்.

இவ்வாறாக பெண்ணடிமை நிலை மாற ஒரு புரட்சி தேவை என்றும் பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களோடு இணைந்து போரிட வேண்டுமேயன்றி மற்ற வர்க்கப் பெண்களோடு இணைந்து செயல்படக் கூடாது என்று ஏங்கல்ஸ் மார்க்சிக பெண்ணியக் கருத்துக்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளதை அறிய முடிகிறது.

## தீவிரவாதப் பெண்ணியம்

*'Radical'* என்ற ஆங்கில சொல்லுக்கு "வேர்" *(Root)* என்பது பொருள். இச்சொல் லத்தீன் மொழியில் உருவானது. தமிழில் இதைத் தீவிரவாதம் என்று மொழிபெயர்த்தனர்.

சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே *'Radical'* என்ற சொல்லைப் பெண்ணியவாதிகள் பயன்படுத்தினர்.

மிதவாதப் பெண்ணியத்திலிருந்து விலகி ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்த பல பெண் அமைப்புகளிலிருந்து பிரிந்த பெண்கள் தங்களுக்கென சில அமைப்புகளைத் தோற்றுவித்து தங்களது பிரச்சனைகளை ஆராய்ந்தனர்.

பெண்கள் அடிமைகளாக அன்றி ஓர் உயிராக கருதப்பட வேண்டும் என்ற கருத்து வலுபெற்று ஆண் ஒதுக்கப்பட வேண்டியவன் என்ற கருத்தாக்கம் நிலைபெற்று தீவிரவாதப் பெண்ணியத்தின் வலுவான கொள்கை நிறுவப்பட்டது.

பெண்களின் இயற்கையான தன்மைகளை பற்றிய வாதத்தை மையமாகக் கொண்டது எனக் கூறினர்.

பெண்ணியத்தின் மையக் கருத்தான பெண்களும் ஆண்களைப் போன்று சுதந்திரமானவர்கள் என மிதவாத, சோசலிசப் பெண்ணியவாதிகள் ஒப்புக் கொண்டாலும் சில தன்மைகளில் பெண்கள் வேறுபடுகின்றனர் என்ற கருத்து கொண்டனர். மேலும் பெண்களது வேலைகளை தனிநபர் வட்டத்திலிருந்து பொது வட்டத்திற்கு மாற்றுவது பாலினத் தன்மைகளை மாற்றாது என விவாதித்தனர்.

தீவிரப் பெண்ணியவாதிகள் இதனை மறுத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாலின மாறுபாட்டுத் தன்மைகள் கிடையாது என்றும் அதன் அடிப்படையில் சமூகத்தில் கடைப்பிடிக்கும் பங்கீடுகள் நியாயமற்றவை என விவாதித்து போராடினார்கள்.

பாலின பாகுபாட்டின் அடிப்படையிலமைந்த நசுக்குதல் பொருளாதார பாகுபாட்டு நசுக்குதலை விட, சமூகத்தின் தன்மைகளை அதிகளவில் பாதிக்கிறது என்று வாதிட்டனர்.

ஆண்கள் பெண்களை ஆள்வதைத் தங்கள் பிறப்புரிமைகளாகக் கொண்டுள்ளனர். இதுதான் இன்றைய சமூகத்தில் இருக்கும் அடிப்படையான சமூகத்தின் எல்லாக் கூறுகளிலும் பரவி நிற்கும் சமூகக் கலாச்சாரக் கோட்பாடு என்பதால் பெண் நசுக்கப்பட்ட வர்க்கத்தினர் என்பதை தீவிரவாதப் பெண்ணியவாதிகள் மாற்ற போராடினார்கள்.

பாலியல் வேறுபாடுகள் சமூகத்தின் அடிதளத்தில் இருந்து நிலவுவதால் பொதுவானதாக உணரப்பட்டு வேறுபாடுகள் இயற்கையானவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன இதனை தீவிரவாத பெண்ணியம் எதிர்க்கின்றது.

மேலும் பொதுவான மரபுசார்ந்த அரசியல் நிறுவனங்களை ஆராய்ந்து பெண்கள் ஏன் நசுக்கப்படுகின்றனர் என்பதன் காரணங்களை கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றது.

தனிமனித வாழ்வில் நசுக்கப்படுவது போல பொது வாழ்விலும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் நசுக்கப்படுகின்றனர் என்பதை உணரச் செய்யும் வண்ணம் இவர்களது செயல்பாடுகள் அமைந்தன.

தீவிர ... முக்கிய கோட்பாடுகள்

* ஆண் நாயகம்
* குடும்ப அமைப்பு
* பாலியல்
* பெண்களின் வரலாறு

ஆண்களும் பெண்களும் ஆண் நாயகச் சமூகத்திற்கு இயைந்தவாறு உருவாக்கப்பட்டு ஆண் நாயகத்தைப் பலப்படுத்துகின்றனர். இது ஆணாதிக்கத்தின் அடித்தளமாகும்.

ஆணாதிக்க சமூகம் வன்முறையாலேயே காக்கப்பட்டுள்ளது. ஆண்கள் தங்களது சக்தியையும் மேலாண்மையையும் நிலைநிறுத்திக் கொள்ள பெண்களை வன்முறைக்கு ஆளாக்குகிறார்கள் என்று கருதப்படுகிறது.

அடக்கு முறையின் ஒருவடிவம் கற்பழிப்பு (அ) பாலியல் வன்முறை. தனிப்பட்ட ஒரு பெண் தான் கற்பழிக்கப்பட்டாளோ இல்லையோ அதனுடைய பயத்தை உணர்ந்திருந்தாள். இதனுடைய விளைவே அவளுக்கு ஆணிடத்து ஒரு அச்சமும், அவனிடத்து தன்னை எல்லா நிலையிலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி கொண்டு செயல்பட தூண்டியது ஆகும்.

## குடும்ப அமைப்பு

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் பெண்களின் அடிமைத்தனத்திற்கு வித்திடுவது குடும்பம் என்ற அமைப்பும் அதற்குத் தொடக்கமாக அமையும் திருமணம் என்பதுமாகும் என்று கருதுகின்றனர். எனவே பெண்விடுதலை என்பது திருமண முறையை அடியோடு அழித்தால் ஒழிய கிடைக்க முடியாது என்று அதிதீவிரத்தை முன் வைத்தனர்.

சமதர்மவாதிகளுககு முதலாளித்துவம் எப்படியோ அப்படியே தீவிரவாதிகளுக்கு திருமணம் குடும்ப அமைப்பிறகு அடிப்படையான ஆண் பெண் இணையும் இருபால் சேர்க்கையைத் தீவரவாதிகள் தீவிரமாக எதிர்த்தனர்.

பால் உறவு அல்லது பால் ஈடுபாடு என்பது ஆணையும் பெண்ணையும் உடல்வழி இணைக்கும் பாலம் என்றாலும் அதுவே

ஆண், பெண் இருவருக்கும் முரண்பாடுகளை உருவாக்கும் இடமாகவும் அமைந்துள்ளது.

பாலியல் உறவு பெண்களை அடிமைப்படுத்த ஆண்களால் கையாளப்படும் வரை அவர்கள் உளவியல் பாங்கில் விலகித்தான் போவார்கள்; எனவே பாலியல் விடுதலையே தனிக்குடும்ப அமைப்பில் திருமணத்தினால் ஏற்படும் கட்டாய உடலுறவுக்கு ஒரு முடிவு கட்டும் என்று கூறுகின்றனர்.

ஒருநபர் மணம் என்ற விதிமுறை ஆண் பெண்ணின் பாலியல் மீது கொள்ளும் ஆதிக்கத்தைக் குறிக்கின்றது என்று வாதிடுகின்றனர்.

## பெண்களின் வரலாறு

சமூக மாற்றத்தில் பெண்கள் ஆண் நாயகத்தால் நசுக்கப்படும் வழக்கம் ஏன் தோன்றியது என்பதை உணர்ந்தால்தான் அந்நிலையை மாற்றும் வழிவகைகளை ஆராய இயலும் என்பதால் வரலாற்றை ஆய்வு செய்வது முக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

மேலும் தீவிரவாதப் பெண்ணியவாதிகள் ஆண்களை எதிரிகளாகக் கருதுவதால் ஆண் நாயகத்தால் ஏற்பட்ட நிறுவனங்கள் மதிப்பீடுகள் எல்லாவற்றையும் மாற்ற வேண்டுகின்றனர்.

## தீவிரவாதப் பெண்ணிய வாதிகளின் கொள்கைகள்

நசுக்குதல் என்பது அடிமட்டத்திலிருந்து ஏற்படுவதால் மேல்மட்டத்தில் பெண்களுக்குச் செய்யும் சீர்திருத்தங்கள் பயனளிக்காது எனவே புதுசமுதாய அமைப்பை ஏற்படுத்துதல். பாலியல் தொடர்புகளில் முழுச் சுதந்திரம் அளித்து குடும்ப அமைப்பு தகர்க்கப்படுதல்

* மனித மறு உற்பத்தியை காரணம்காட்டி பெண்களை தாழ்மைப்படுத்தும் நிலையை மாற்றி குழந்தை பெறுவதிலிருந்து சுதந்திரம் பெறுதல்.

* தனிப்பட்ட குடும்ப அமைப்பில்லாது குழந்தைகளை கூட்டுமுறை சமுதாயத்தில் வளர்ப்பதால் மேம்பட்ட அறிவும் அனுபவமும் கிடைக்க வழி செய்தல்.

* ஆண், பெண் இருபாலருக்கிடையேயுள்ள வேலைப் பாகுபாடுகளையும், வேறுபாடுகளையும் அறவே நீக்குதல்

* குடும்பம் பெண்களை சுரண்டும் அமைப்பு என்றும் குழந்தைப் பருவத்திலிருந்து முரண்பட்டான முறைகேடான அடிமை முறைக்குப் பழக்குவித்து அவர்களின் தனித்தன்மையை அழித்தது என கட்டுரைகளின் மூலமும் துண்டுப் பிரசாரங்கள் மூலமாகவும் 1970-களில் எடுத்துரைக்கத் தொடங்கினர்.

ஆண்களை முழுமையாக ஒதுக்கிய சமுதாயத்தை உருவாக்குதல்,

பெண்களின் பிரச்சனைகளை பொது இடத்தில் பொது வாழ்வில் விவாதிக்க கூடாது என்ற ஆணாதிக்க நிலையை எதிர்த்து பெண்களின் பிரச்சனைகளைப் பொது பிரச்சனையாகப் பிரகடனப்படுத்துதல்.

இவ்வாறு பலத் தீவிரமான கொள்கைகளைக் கொண்டு தீவிரவாதப் பெண்ணியவாதிகள் தங்கள் நிலையை வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

**சோசலிசப் பெண்ணியம்**

*1973*-களில் மார்க்சிச கோட்பாட்டில் நம்பிக்கையுள்ள அமெரிக்க பெண்ணிய வாதிகள் மார்க்சிசம், பெண்ணியம் ஆகிய இரண்டு கோட்பாடுகளுக்கிடையில் காணப்படும் கருத்து வேறுபாடுகளை ஒழுங்குபடுத்தவும், பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான நசுக்குதலின் காரணங்களையும் அறிந்து அவற்றை நீக்கும் வழிமுறைகளை ஆராயவும் பெண்ணியக் குழுக்களை ஏற்படுத்தினார்கள்,

இதனடிப்படையில் சோசலிசப் பெண்ணியம் என்பது பெண்ணியக் கருத்துக்ககளின் மூலமும், மார்க்சிசக் கருத்துக்களின் மூலமும் பெண்ணடிமையின் காரணங்களை ஆராய முற்படுவது ஆகும்.

மேலும் ஏற்றத் தாழ்வுகளற்ற சமுதாயத்தை உருவாக்க இவர்கள் முயற்சி செய்தனர். சமூக அமைப்பே குறைபாடுள்ளது அதனை புரட்சியின் மூலம் மாற்றம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

ஜீலியட் மிட்சல் *(Juliet Mitchell)* என்பவர் மார்க்சிச கொள்கையின் படி தனிநபர் சொத்துரிமையை அழித்துவிடுவதன்

மூலம் மட்டும் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது என்று சுட்டிக் காட்டுகிறார்.

இவர் ஆய்வின் மூலமாக பெண்கள் சமூகங்களில் எவ்வாறு நசுக்கப்படுகிறார்கள். ஏன் நசுக்கப்படுகிறார்கள் என்பதனை நான்கு முக்கியக் கூறுகளில் மறுஆய்வு செய்கின்றனர். அவை,

* **உற்பத்தி**
* **மனித மறு உற்பத்தி**
* **பாலியல்**
* **குழந்தை வளர்ப்பு என்பனவாகும்.**

**உற்பத்தி**

பெண்கள் பொது வேலைகளில் ஈடுபடாததற்குக் காரணம் அவர்களது உடற்கூறு அன்று மாறாக சமூகமே ஆகும். சமூகத்தில் ஆண்களுடன் வேலைகளைச் சரிசமமாகப் பகிர்ந்து கொண்டாலும் சமூக நிலையும், சமூகத்தின் மதிப்புகளும் மாறாதவரை பெண்களுக்கு சமத்துவம் கிடைக்காது என்று கூறியுள்ளார்.

இங்கு உற்பத்தி என்பது பொருள் உற்பத்தியை குறிக்கிறது.

**மனித மறு உற்பத்தி**

பெண்கள் குழந்தைப் பேற்றின் காரணமாக குடும்பத்தில் முடக்கப்படுவதை தடுக்க குடும்பம் என்ற அமைப்பை அழிக்க வேண்டும் என்ற கருத்து மார்க்சிக வாதிகள் கூறுகின்றனர். ஆனால் இது சரியல்ல என்று மிட்சல் குறிப்பிடுகின்றார்.

இதற்கு மாறாக குடும்பத்தின் பங்குப் பணிகளை ஆராய்ந்து அவற்றைத் தகர்க்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கிறார். மேலும் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் எளிதில் கிடைப்பதன் மூலம் மனித மறுஉற்பத்தியை கட்டுப்படுத்த இயலும் என்று எடுத்துரைக்கின்றார்.

**பாலியல்**

குடும்பத்தில் ஆண் பெண்களுக்கிடையே நிலவும் சமத்துவமற்ற அதிகாரம் ஆண் பெண்ணை சுரண்ட அனுமதித்தது என்றும் இருவருக்கும் சமமான பாலியல் சுதந்திரம் கிடைக்கும் பொழுது இந்நிலையை மாற்றம் செய்ய முடியும் என்று கருத்துரைக்கின்றார்.

## குழந்தை வளர்ப்பு

பெண்கள் குழந்தை பெறுவதால் அவர்களே குழந்தையை வளர்க்க வேண்டும் என்ற நிலையை குழந்தை கூட்டுமுறை சமுதாயத்தால் வளர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இவ்வாறாக ஜீலியட் மிட்சலின் கருத்து குடும்பம் என்பது பொருளாதாரத்தோடு மட்டும் அல்லாது வேறு நிலைகளோடும் சம்மந்தப்பட்டதென விளக்குவதை அறிய முடிகின்றது.

பாலின அடிப்படையில் நசுக்கப்படுவது ஒப்புக் கொள்ளப்பட்டாலும் சமூகத்தில் மேலும் பல்வேறு வகைப்பட்ட கூறுகள் பெண்களை நசுக்கக் காரணமாக உள்ளன என்பதை சோசலிசப் பெண்ணியம் எடுத்துக் காட்டுகிறது. அவை,

பாலின பாகுபாடுகளினூடே நாடுகள், இனம், வயது, அறிவுத்திறன் மதம் வர்க்கம் இவைகளும் செயற்படுகின்றன.

ஒரே வர்க்கமாக பொது நசுக்குதல்களுக்கு ஆளாவதைப் போல தாம் சார்ந்த இன ஆண்களின் தனிப்பட்ட அடக்குமுறைகளுக்கும் ஆட்படுகின்றன.

பெண்களை தாக்கும் மற்ற பிரச்சனைகளோடு வர்க்க, இனப் பிரச்சினைகளையும் கூறுகின்றனர்.

மேலும் இக்காரணங்களினால் பெண்கள் தங்கள் பிரச்சனைகளுக்காக போராடும் போது சோசலிசக் குழுக்களோடு போராட வேண்டுமென்று எடுத்துரைக்கின்றனர்.

சோசலிசப் பெண்ணியவாதிகள் கூறும் மார்க்சிச தத்துவ கருத்துப்படி மனித மறு உற்பத்தி என்பது குழந்தைகளை ஈன்றெடுப்பதுடன் மக்களை வளர்த்து ஆளாக்கி சமூக நிலைக்குத்தக்கவாறு உருவாக்கி, சமூகத்திற்குத் தொழிலாளர்களை வழங்கும் பணி என்று கூறுகின்றனர்.

அதனால், உற்பத்தி என்னும் சொல் மனித மறு உற்பத்தியையும் குறிக்குமாறு விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற கருத்தையும் கூறுகின்றனர்.

பெண்கள் வீட்டில் செய்யும் வேலை ஆண்கள் வெளியில் செய்யும் வேலைக்கு இணையான மதிப்பைக் கொண்டது ஆனால் அதற்கான மதிப்பும் ஊதியமும் அளிக்கப்படாததை சாடி

வாழ்க்கையின் வெளி, உட்பகுதிகள் என்ற பாகுபாட்டை நிராகரிக்கின்றனர்.

சோசலிசவாதிகள் மாற்றம் செய்ய கூறும் செயல்கள் சில உள்ளன. அவை,

* மேலோட்டமான சீர்திருத்தங்கள் பயனளிக்காது என்று உணரச் செய்தல்,
* தனித்த குழுக்களாக போராட்டம் செய்தல்,
* சமூகம் ஆண்களுக்கு சாதகமாக உள்ளதால் பெண்களுக்காக போராட முன்வரமாட்டார்கள் என்று உணரச் செய்தல்
* ஆண்களைப் போன்று பெண்களும் பொது வேலைகளில் ஈடுபட வேண்டும். தனிவேலை (அ) குடும்ப வாழ்க்கை என்ற முறைகளில் கட்டுப்பாடு கூடாது.
* பொது வேலைகளில் ஈடுபட சமமான கல்வி வாய்ப்புகள் பெண்களுக்கு அளித்தல்.
* குடும்பம் எனும் அமைப்பை அழித்து வேறுவகையான வாழ்க்கை முறைகளை பரிசீலித்தல்.
* கூட்டு வாழ்க்கை சுதந்திரமான உறவுகள், மூலமாக பெண்களுக்கு குழந்தைப் பேற்றிலிருந்து சுதந்திரம் அளிக்க வழிவகை செய்தல்.
* பெற்றோர் பெயர் தெரியாமல் பிறக்கும் குழந்தை வளர்ப்பினை சமூகத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்ய வழிவகை செய்தல்

போன்றவை ஆகும். இக்கருத்துக்கள் சோசலிச வாதிகள் குடும்ப அமைப்பை மறுப்பது பெண்களுக்கு தனிமனித சுதந்திரத்தை வழங்குதல் என்ற கொள்கையின் அடிப்படையில் என்பதை தெளிவுபடுத்துகின்றது.

## முடிவுரை

மிதவாதப் பெண்ணியம் சீர்திருத்தத்தில் நம்பிக்கை உடையதாக அமைகின்றது.

தீவிரவாதப் பெண்ணியமும், சோஷலிசப் பெண்ணியமும், ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்க முற்படுவதாக அமைகின்றது.

மார்க்சியப் பெண்ணியம் வர்க்கத்திற்கும் தீவிரப் பெண்ணியம் பாலியல் போராட்டத்திற்கும் முதலிடம் அளிக்கிறது.

சோசலிசப் பெண்ணியம் சமூக நசுக்குதலுக்குக் காரணமானவைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்ற நிலையில் அமைகின்றது.

இவ்வாறாக பெண்ணிய வகைகள்ங அமைவதை அறிய முடிகின்றது.

# மேலை நாடுகளில் பெண்ணியம்

ம. தமிழ் இலக்கியா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி(த),
தஞ்சாவூர்.

பெண்ணுக்கொரு நீதிகண்டீர்,
பேதமென்னும் மதுவையுண்டீர்,
கண்ணிலொன்றை பழுது செய்தால் கான்றுமிழாதோ?

என்று பெண்ணடிமைச் சிந்தனை மனித சமூகத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று புரட்சிக்கவி எடுத்துக்காட்டியுள்ளார். அன்னாரைப் போன்று பல சான்றோர் பெருமக்கள் விடுத்தவழியில் முன்னேறி பெண்ணியம் என்ற கருதுகோள் முகிழ்ந்துள்ளது.

ஆண்நலச் சமூகத்தில் இருந்து பெண்கள் தங்களை விடுவித்து இச்சமூக மதிப்பீட்டை கேள்விக்கு உள்ளாக்குதல் மற்றும் பெண்கள் தங்களின் இருத்தலை இவ்வுலகிற்கு உணர்ந்துதல் என்ற வகையில் பெண்ணியத்தை புரிந்துகொள்ளலாம். எந்த ஒரு இலக்கிய கருத்தாக்கம் தோற்றம் பெறுவதற்கும் தேவையான சமூகத்தேவை இருத்தல் அவசியமானது. அந்தவகையில் மேலைநாடுகளில் தோற்றம் பெற்ற பெண்ணியம் தமிழ்சூழலில் வளமடைய தேவையான காலச்சூழல் இங்கு காணப்பட்டது.

## பெண்ணியத் தோற்றத்திற்கான தேவை

பெண் என்பவள் தன்னை அதாவது தனது இருப்பை ஆளுமையை உணர்ந்தவள் என்று குறிப்பிடுகிறார் தி.சு. நடராஜன் பெண்மையின் இலக்கணமாக,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரியஎன்ப

என்று ஒல்காப்புகழ் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உலக பொதுமறையாம் திருக்குறள்,

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்று குறிப்பிடுகிறது. பெண்களுக்கு உரிமையாக பெண்மையும் மென்மையுமே முன்னிறுத்தப்படுகிறது.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன

என்று பெண்களுக்குரிய இயல்புகள் சுட்டப்படுகின்றன.

இவையனைத்தையும் நோக்கும் போது பெண்கள் தங்களது உரிமைகளை தொலைத்து உணர்வுகளைத் துறந்து குடும்பத்தை மட்டுமே நிர்வகித்து ஆண்களின் துணை இருந்தால் மட்டுமே வாழமுடியும் என்ற நிலையில் இருந்து வந்துள்ளமையை உணரமுடிகிறது. அச்சத்தையும் நாணத்தையும் வைத்துக் கொண்டு பெண்கள் எதை சாதிக்க முடியும் என்ற எண்ணமும் தோன்றுகிறது.

வர்ணாசிரம அமைப்பிற்கு பற்றுக்கோடாக திகழும் மனுதர்மம்,

பெண்கள் எப்பருவத்தினராயினும் தம்மிச்சைப்படி எப்போதும்
எச்செயலையும் தன்வீட்டிலும் கூட இயற்றும் உரிமையற்றவரே

என்று பெண்கள் மீதான உட்சபட்ச அடக்குமுறையினை பதிவு செய்துள்ளது. "ஏறத்தாழ உலகம் முழுவதிலும் வியாபார பொருளாக விற்றுத்தீர்ந்து விடக்கூடிய ஒரு சொத்தாகத்தான் பெண் நடத்தப்பட்டிருக்கிறாள். எனவே தான் அவள் போர்க்களத்தில் தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறார்கள், அந்தப்புரங்களில் ஆண்மையின் சின்னமாக அடுக்கப்பட்டிருக்கிறாள். கலை இலக்கியங்களில் கூடச் சந்தைக்கான அழகுப் பொருளாகத்தான் பயன்பட்டிருக்கின்றாள்" என்று குறிப்பிடும் க.பஞ்சாங்காத்தின் வரிகள் பெண்களைப் பற்றிய முழுமையான புரிதலை ஏற்படுத்துகின்றது. பெண்களுக்கு என்று தனிஅடையாளம் இன்றி ஆண்களின் அடையாளமாகப் பெண்கள் இருந்து வருகின்றனர். பரணன் முதல் பாரதி வரை பெண்களின் கண்ணச்சிவப்பை பாடியுள்ளனர் என்ற வைரமுத்துவின் வரிகளும் பெண்கள் எழுச்சி பெற்று விழிப்புணர்வோடு தங்கள் விடுதலைக்காக தங்களின் இருப்பை இவ்வுலகிற்கு உணர்த்த கைகோர்க்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. இவற்றை எல்லாம் மனதிற்கொண்டு ஏற்படுத்தப்பட்ட இயக்கமே பெண்ணியம் ஆகும்.

இது மேலைநாடுகளில் தோற்றம் பெற்று தற்கால இலக்கியச் சூழலில் தமிழ்ச் சமூகத்தில் புரட்சிக்கு வித்திட்டுள்ளது எனலாம்.

**பெண்ணியம் - சொற்பொருள்**

பெண்ணியம் என்ற சொல் *Feminism* என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி தமிழ்ச் சொல்லாகவே இன்று கையாளப்பட்டு வருகிறது. *Feminism* என்ற ஆங்கிலச் சொல் *'Femina'* என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்துள்ளது. *'Femina'* என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள *(having the qualities of Female)* என்பது பொருள். ஆக்ஸ்ஃபோர்டு அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்று பொருள் தருகிறது.

**வரையறைகள்**

பெண்ணியம் என்பது பெண்ணினத்தின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் முன்னேற்றத்திற்காக இயக்கரீதியாக செயல்படுவது. பெண்களை தங்களது சுதந்திரம் பற்றி சிந்திக்கத் தூண்டுவது என்றும் பொருள் கொள்ளலாம்.

பெண்ணியத்திற்கு பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டு வரும் சூழலிலும் பெரும்பாலும் அது தந்துநிற்கும் நிலைபாடு "பாலின சமத்துவம்" *(Sexual Equality)* என்பதாகும்.

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்கமுயல்வதாகும். அதன்மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்கிறார் சார்லட் பன்ச். மேலும்,

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமில்லாமல் சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின் இயக்கம் என்பது ரோஸலண்ட் மெல்மார் கருத்தாகும்.

பெண்ணியத்தின் மையச்செயற்பாடு சமுதாயத்தி பெண்களின் நிலை மாற்றம் அதாவது அடிமைதனத்தை களை என்று ரேஸ்டான்சி அம்மையார் குறிப்பிடுகிறார்.

பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதைமமாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம் என்பது கார்டனின் கருத்தாகும்.

புட்சர் என்பார் பெண்ணியம் பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே என்று கருத்துரைக்கிறார்.

இவ்வாறாக ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவுரிமையோடு பெண்ணின் அடிமை விலங்கினை தகர்த்தெறிந்து சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் முன்மொழிவதாக பெண்ணியம் வரையறை செய்யப்படுகிறது.

## மேலைநாடுகளில் பெண்ணியம்

தமிழகத்தில் பெண் விடுதலை சார்ந்த மொழியாடல்களை வேதநாயகம்பிள்ளை, மாதவையா, பாரதியார், திரு.வி.க, பெரியார், பாரதிதாசன், டாக்டர் முத்துலெட்சுமி, மூவலூர் ராமமிர்தம் குஞ்சாரி அம்மாள் முதலியோர் வளர்த்தெடுத்த போதும் கூட இயக்கமாக, கோட்பாடாக உருப்பெற்றது மேலைநாடுகளின் தாக்கத்தால் தான். மேலைநாடுகளில் இதன் தோற்றம் கி.பி. 1400 லிருந்தே முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பர்.

மேலைநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பெண்ணியம் தோன்றக் காரணமாக அதன் சமூகப் பின்னணி அமைந்து இருந்தது. ஐரோப்பிய சமூகத்தில் தோன்றிய மாற்றங்களும் புதிய கருத்தோட்டங்களும் எந்தஒரு செயலையும் கருத்தையும் ஆராய்ந்தறிந்து தெளியும் எண்ண அலையை தோற்றுவித்திருந்தது. இதன் விளைவாக உலக வாழ்க்கையின் கூறுகள் அனைத்தும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது. சமூகத்தில் காலம் காலமாக வழங்கிவந்த ஏற்றத்தாழ்வுகள், ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்பீடுகள் யாவும் விவாதத்திற்கு உரிய பொருட்கள் ஆகின. இதன் விளைவாக உண்மைக்கு புறம்பானவைகளாகக் கருதப்பட்டச் சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி, எல்லாருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்பீடுகள் உருவாகத் தொடங்கின.